# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை உயிரினவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, ஜூன் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, ஜூன் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை உயிரினவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, ஜூன் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 39/83
1644

## இலங்கை உயிரினவியல் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை உயிரினவியல் நிறுவகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட துணை விதிகளுக்கிணங்க உயிரினவியலின் எல்லாக் கிளைகளிலும் அதன் அறிவியலையும் தொழில்முறையையும் பொதுவாக முன்னேற்றுவதற்காகவும் அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் நோக்கங்களையும் இன்னும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்துவதை இயலச்செய்வதற்கென கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை உயிரினவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) இலங்கை உயிரினவியல் நிறுவகத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (அவர்கள் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினராக தொடர்ந்து இருக்கும்வரை) (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை உயிரினவியல் நிறுவகம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தலும் ஆதலும் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். இலங்கை உயிரினவியல் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) உயிரினவியல் அறிவியலையும் இலங்கையில் அதன் பயன்பாட்டையும் மேம்படுத்துதலும் முன்னேற்றுதலும் ;

ஏ 68455—2,675 (02/84)

(ஆ) நாட்டின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்குமாக உயிரினவியலின் பயன்பாட்டோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களின் மீதும் அரசாங்கத்துக்கு ஆலோசனையளித்தலும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூர் சபைகள், ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அறிவுரை கொடுத்தலும் ;

(இ) (i) உயிரினவியல் அறிவுபற்றிய மூலத் தொடர்புகளையும் கலந்தாராய்வுகளையும் முன்வைப்பதற்கென ஒரு பொதுவிடத்தை ஏற்பாடு செய்வதன்மூலமும் ;

(ii) நூலகங்களைத் தாபித்துப் பேணிவருவதன்மூலமும் ;

(iii) உயிரினவியல் உயர்தொழில் அக்கறைகொள்ளக்கூடிய விடயங்களை வெளியிடுவதன்மூலமும் ; அத்துடன்

(iv) வேறு எவையேனும் வழிகள் மூலமும்,

உயிரினவியல் அறிவைப் பெறுவதனையும், பரப்புவதனையும், பரிமாற்றுவதனையும் மேம்படுத்தல் ;

(ஈ) எல்லா மட்டங்களிலும் உயிரினவியலிலான கல்வியை மேம்படுத்துதல் ;

(உ) உயிரினவியலில் மூல ஆராய்ச்சியை மேம்படுத்துதலும், ஊக்குவித்தலும், வளர்த்தலும் ;

(ஊ) உறுப்பாண்மையின் வெவ்வேறு தரங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேர்வுவிழைநர்களுக்குள்ள தகுதியை மதிப்பிடுதல் ;

(எ) நிறுவகத்தின் எல்லாத் தரங்களுக்குமான தகுதியளிக்கும் பரீட்சைகளை நடாத்துதலும் அல்லது நடாத்த ஏற்பாடு செய்தலும், அத்தகைய பரீட்சைகளுக்கான கற்கை நெறிகளை மேம்படுத்துதலும், ஏற்பாடு செய்தலும், அல்லது அங்கீகரித்தலும் ;

(ஏ) உயர்தொழில்சார் செயற்பாடுகளிலும் அதன் உறுப்பினர்களின் பொது நடத்தையிலும் உயர்தரங்களைப் பேணுவதனை உறுதிப்படுத்தல் ;

(ஐ) வேறு அறிவியல் ஒழுங்கமைப்புகளுடன் பிணைப்பைத் தாபித்தல் ;

(ஒ) இலங்கையில் உயிரினவியல் உயர்தொழிலின் நிலையைத் தாபித்தலும் உயர்த்துதலும் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடிய வேறெவையேனும் வழிவகைகளை எடுத்தல்.

*கூட்டுத் தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் ; இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்

பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடுசெய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் துணைவிதிகளுக்கமைய, அத்தகைய துணைவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவும் அவற்றிற்கிணங்கவும் தெரிவுசெய்யப்படும் அலுவலர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த பேரவையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் நிறுவகத்தின் பேரவையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் துணைவிதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராத துணைவிதிகளை, பொதுக் கூட்டம் எதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக் கொண்டு காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய துணைவிதிகள் ஆக்கப்பட்டபோது, அதேபோன்ற கூட்டத்திலும், அதே முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம், அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் துணைவிதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

ஆதனத்தைக் கொள்ளவும் பணம் திரட்டவும் உள்ள தத்துவம்.

7. (1) கொள்வனவு, கொடை, அளிப்பு, மரணசாதனக் கையளிப்பு, கொடுத்துமாற்றுகை மூலமாகவோ, வேறெம்முறையிலுமோ ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், அதனை வைத்திருக்கவும் கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆதனத்தைக் கையாளவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி தகுதியுடையதாயும் ஆற்றலுடையதாயும் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமான பணத்தைக் கடனெடுக்க அல்லது திரட்ட தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தைப் பெறுவதற்கு எவையேனும் ஈடுகளை, முறிகளை அல்லது கடப்பாடுகளை உருவாக்க, எழுதி நிறைவேற்ற, அளிக்க அல்லது வழங்க தத்துவமுடையதாதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனமெல்லாம், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் அல்லது துணைவிதிகளின்கீழ் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட பணங்களெல்லாம், அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக துணைவிதிகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும், பயன்படுத்தப்படுதலும் பிரயோகிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய துணை விதிகளுக்கமைய கூட்டுத்தாபனமானது, அத்தகைய ஏதேனும் ஆதனத்தைக் காலத்துக்குக் காலம் வாங்க, விற்க, மானியக்கொடையாக அளிக்க, உரித்துமாற்ற, அளிப்பனவுசெய்ய, சாட்டுதல்செய்ய, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையாகக் கையாள அல்லது ஈடுவைக்க, அத்துடன் அதன் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு அவசியமாக அல்லது உசிதமாக இருக்கக்கூடிய அத்தகைய முறையில் அதன் நிதிகளை முதலீடு செய்ய தத்துவமுடையதாதலும் வேண்டும்.

*கட்டணங்களையும் ஒப்பப்பணங்களையும் இறுப்பதற்கான தத்துவம்.*

8. (அ) கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் கற்கை நெறிக்கு அல்லது பரீட்சைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நியாயமானவையெனக் கூட்டுத்தாபனம் கருதக் கூடியவாறான அத்தகைய கட்டணங்களையும் ;

(ஆ) கூட்டுத்தாபன உறுப்பாண்மையின் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த ஆட்களைத் தெரிவு செய்வதற்கான கட்டணங்களையும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சேவைகள் தொடர்பில் கூட்டுத்தாபனம் நியாயமானவையெனக் கருதக் கூடியவாறான அத்தகைய ஒப்பப்பணங்களையும் கட்டணங்களையும்,

இறுப்பதற்குக் கூட்டுத்தாபனம் சட்டப்படி தகுதியுடையதாயும் ஆற்றலுடையதாயும் இருத்தல் வேண்டும்.

*நிறுவகத்தினால் செலுத்தப்படற்பாலவையும் நிறுவகத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.*

9. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் நிறுவகத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் அல்லது கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*குழுக்களை நியமித்தல்.*

10 இலங்கையில் உயிரினவியலர்களாகத் தொழில்புரியும் அல்லது செயலாற்றும் ஆட்களிடையே உயர்தொழில்சார் தரங்களையும் ஒழுக்காற்றையும் பேணுவதற்காக, கூட்டுத்தாபனமானது, காலத்துக்காலம் ஏதேனும் குழுவை நியமிப்பதற்கும் அவசியமெனக் காணப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நடபடிகளை எடுப்பதற்கும், தத்துவமுடையதாதல் வேண்டும்.

11. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிலையியற் கட்டளையின் மூலம் காலத்துக்குக்காலம் போவை அதிகாரமளிக்கும் அத்தகைய ஆட்களின் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்படவேண்டும் என்பது.

12. இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது. குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.